2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த நெடுஞ்சாலைத் துறை என்னிடத்திலே ஒப்படைக்கப்பட்ட பிறகு, அந்தத் துறையை நானும், துறையினுடைய செயலாளர் போன்றவர்களும் ஆய்வு செய்தோம். துறையில் பல்வேறு பணியிடங்கள் காலியாக இருந்தன. 7 தலைமைப் பொறியாளர் இருக்க வேண்டிய இந்தத் துறையில், 4 தலைமைப் பொறியாளர்கள் இடங்கள் காலியாக இருந்தன. 27 கண்காணிப்புப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இந்தத் துறையில், 17 இடங்கள் காலியாக இருந்தன. 120 கோட்டப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில், 51 இடங்கள் காலியாக இருந்தன. 340 உதவிக் கோட்டப் பொறியாளர்கள் இருக்க வேண்டிய இடத்தில், 114 இடங்கள் காலியாக இருந்தன. இவற்றுக்கும் பதவி உயர்வு, பணி உயர்வு வழங்கப்பட்ட பிறகு, திரும்பிப் பார்க்கின்ற நேரத்தில், உதவிப் பொறியாளர் பணியிடங்கள் 270 இன்றைக்கும் காலியாக இருக்கின்றன. இதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, நம்முடைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தை அணுகி இருக்கின்றோம். கடந்த பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி அதற்கான தேர்வுகள் நடத்தப்பட்டிருக்கின்றன. நேர்காணல் விரைவில் நடத்தப்பட்டு, அந்தப் பணியாளர்களும் பணியிடங்களில் நிரப்பப்பட்ட பிறகு, இதுபோன்ற பணிகள், தொய்வான பணிகள் எல்லாம் வேகமாகத் தலைவர் கலைஞருடைய அரசில் நடக்கும். அந்த அளவுக்குத் தரமாகவும், தாமதமில்லாமலும் நடத்த வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுபோன்ற பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், மாண்புமிகு உறுப்பினர் கோபித்துக்கொள்ளக் கூடாது; இந்தத் துறையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கே ஒரு சில நாட்கள் ஆகிவிட்டன எங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 ஏப்ரல் 10

40—

சிறப்புப் பள்ளிகள்

***702—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மத்திய அரசின் மானியத்துடன் ஆதி திராவிட மாணவர்களுக்குச் சிறப்புப் பள்ளிகளை நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாட்டில் மத்திய அரசின் மானியத்துடன், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்குச் சிறப்புப் பள்ளிகள் நடத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.*

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருக்கின்ற சமூக நீதித் துறை அமைச்சகத்தின் இணைச் செயலாளராக இருக்கின்ற திரு. சேவாராம் அவர்களால் கையெழுத்திடப்பட்டு, 16-3-2006 ஆம் தேதியிட்ட கடிதம் ஒன்று மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. அந்தக் கடிதத்தின்படி, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குச் சிறப்புப் பள்ளிகளைத் தொண்டு நிறுவனங்கள் தொடங்க முன்வந்தால், அதற்கான தொகையில் 90 விழுக்காட்டை மத்திய அரசு மானியமாக வழங்க இருக்கிறது. 10 சதவிகிதத்தை மட்டும் அந்தத் தொண்டு நிறுவனங்கள் வழங்க வேண்டும். இதிலே மாநில அரசின் பங்கு, செலவு என்பது ஒன்றுமே கிடையாது. அவர்கள் இதற்கு அனுமதி மட்டும் அளித்தால் போதும். இதன் அடிப்படையில், தொண்டு நிறுவனங்கள் இங்கே பள்ளிகளை, கல்லூரிகளைத் தொடங்க முன்வந்தால், அதற்கு நமது அரசு ஒப்புதல் வழங்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

2007 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுபபுரம் மாவட்டம், வெள்ளிமலை மற்றும் சேலம் மாவட்டம், கருமந்துறை ஆகிய இரண்டு இடங்களில் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு 100 விழுக்காடு மைய அரசின் மானியத்துடன் இரண்டு மாதிரிப் பள்ளிகளும் மேலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் மைய அரசுத் திட்டத்தின்கீழ், சென்னை, கன்னிகாபுரம், ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் நாமக்கல் மாவட்டம், களங்காணி ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. தொண்டு நிறுவனங்கள் இந்தச் சிறப்புப் பள்ளிகளை நடத்துவதற்கான கோரிக்கையை அரசிடம் கொடுத்தால், அரசு அது குறித்துப் பரிந்துரைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

திரு. து. ரவிக்குமார்: நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. தியோடர் ரெஜினால்டு.

திரு. த. தியோடர் ரெஜினால்டு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியில், தக்கலையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற ஆதி திராவிடர் நலத் துறையின் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், அரசு அது குறித்து ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]